உ

சிவமயம்



தென்மராட்சி, சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும்

லண்டன் Northwoodயை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு பொன்னம்பலம் விஜயராஜன் அவர்களின்

31ம் நாள் நினைவு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் பொன்னம்பலம் விஜயராஜன்



தாயின் மடியில்
11.12.1964

இறைவனடியில்
24.08.2014

## திதிவெண்பா

நிகழுறு ஜயவருடம் நிறை ஆவணி இருபத்தினான்கு
புகழுறு பூண்ட அபரபட்ச சதுர்த்தசி தனில் அகநெகிழ
இம்பர்  புகழ் விஜயன் அண்ணலவன் இறைவன் திருவடியை
இங்கிதமாய் அடைந்தாரே இயல்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னம்பலம் விஜயராஜன் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்...

தோன்றிற் புகழோடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும் பொய்யாமொழியை மெய்யாமொழியாக்கி வாழ்ந்து போந்தவர் அமரர் விஜயன் அவர்கள்.

தமிழும், சைவமும் பாரம்பரியமும், தழைத்தோங்கிய செழுமை வாய்ந்த தென்மராட்சியைச் சேர்ந்த சாவகச்சேரியில் தாமோதரம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர் வேளாண் குடும்பத்தில் அமரர் ஆசிரியர் பொன்னம்பலம், ஆசிரியை சரஸ்வதி தம்பதிகட்டு ஏக புத்திரனாக 11.12.1964ம் ஆண்டு மலர்ந்தார். இவருடைய தந்தையார் மழலை வயதான ஐந்து வயதில் இவரின் சிறப்புக்களைக் காணாமல் இறைவனடி சேர்ந்தார். சிறுவயதான விஜயன் தாயின் பாசமிகு அரவணைப்பில் வளர்ந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையிலும் தொடர்ந்து க.பொ.த. சாதாரண தரம் வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். உயர் கல்வியை யாழ்/மகாஜனாக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். 1983ல் இந்தியாவின் பச்சையப்பன் கல்லூரியில் தனது பட்டப்படிப்பு (Degree) முடித்தார். இவர் விளையாட்டில் மிகுந்த ஆர்வத்தினால் பல வெற்றிப் பதக்கங்கள் பெற்றார். விளையும் பயிரிலேயே பல விந்தைகள் மிகுந்து எழுந்தார். அன்பும் அருளும் ஆழ்ந்த பேரறிவும் பெற்றோர் உறவினர் பாசமும் பெரியோர் வாழ்த்தும் பெற்று, உயர்ந்து உறுகலை பயின்று கற்று கலைமகன் இளநிலவு ஆயினன். 1987ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு வந்து சிறிது நாட்களில் Psychiatric Hospitalல் மேற்பார்வையாளராகப் பணி புரிந்தார். அதே காலத்தில் தனது தாயாரை இலங்கையில் இருந்து வரவழைத்தார். தாயாருடன் இருக்கும்போது தான் உதயஞாயிறாய் உயர்வுற்று எழுந்தவன் உள்ளம் மகிழவே உயர் மணம் கண்டனன். தென்மாராட்சியில் விழைந்த முத்து வலிகாமத்தில் இணையினைப் பெற்றது. சண்டிலிப்பாய் தனில் குணமொழி குன்றாத் தவராசாவும் இணங்கிடும் தவத்தினர் அன்னமலர் தம்பதிகட்கு உதித்த மலராம் பாவை விளக்கென மிளிர்ந்த மேன்மையள் ஸ்ரீறஞ்சனி என்னும் பொன்மகளை (15.03.1992)ல் இதயத் தலைவியாய் இனிது வாய்த்தனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறவாழ்வில் இணைந்து அன்றில் பறவை போல் அணைந்து அன்பு நிதம் சொரிந்து தான தருமங்கள் விருந்தோம்பல் ஒருங்கே சேர, பயனாக செல்வன் சணண் (Campus) செல்வன் நிறொன் (A/L) செல்வி சாறா (A.S) மூன்று முத்துக்களையும் பெற்று உவகையடைந்தனர். பின்பு சிறு தொழிலாக Alan Parker Estate Agent ஸ்தாபனத்தில் பணிபுரிந்தார். பின்பு Easthamல் Costcutter ஸ்தாபனத்தின் உரிமையாளராகவும் South Harrowல் சபரி நகை மாளிகை ஸ்தாபகராகவும் விளங்கினார்.

இதைவிட சமூக சேவை தொண்டுகள் பலவற்றில் அரும்பாடு பட்டவர். சாவகச்சேரி பழைய மாணவர் ஆசிரிய சங்கத்தின் சார்பாக சங்கத்துடன் சேர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்காக அரும்பாடுபட்டார். இந்து ஆரம்ப பாடசாலைக்கு பூந்தோட்டம் அமைத்துக் கொடுத்தார். இது மட்டுமல்ல தன்னுடைய உறவினர்கள் பலரை லண்டனுக்கு வரவழைத்து படிப்பித்து நல்ல நிலையில் திருமணங்களும் செய்து வைத்துள்ளார். இலங்கையில் அனாதைப் பிள்ளைகட்கு கல்வி கற்கும் ஒழுங்குகளையும் செய்து கொடுத்து வந்துள்ளார்.

அத்துடன் Harrowல் ஐயப்பன் கோவில் அமைப்பதற்கு அரும்பாடுபட்டவர். இப்படியாக பலவித தொண்டுகள் செய்து வந்த விஜயனை ஏனோ ஆண்டவன் தன் அடியில் 24.08.2014 அன்று சேர்த்துக் கொண்டார்.

முத்துக்கள் வரிசையிலே சிறப்பானது ஆணி முத்தாம் வித்துக்கள் என்றெடுத்தால் நல்ல விதை ஒரு சிலவாம் அதேபோன்று கற்றோருக்குள்ளே ஒரு சிலரே கல்விமானாம்!

அன்னாரின் ஆத்மா ஐயப்பன் பாதாரவிந்தங்களை சேர்ந்து சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயன் அண்ணை பற்றிய நினைவுகள்

நேற்று சந்தித்தது போல இருக்கிறது அவரது இறுதி சந்திப்பு. மின்னாமல் முழங்காமல் திடீரென்று வந்த அவரது உடல் நலக்கேடு பற்றிய செய்தி எங்கள் இதயங்களில் இடி விழுந்தது போல் இருந்தது. இவருக்கா இப்படி என்று எங்கள் நெஞ்சம் இந்தச் செய்தியை ஏற்க மறுத்தது. நாங்கள் தாங்கக் கூடிய இழப்பா இது?

இவ்வாறு சிலர் திடீரென எதிர்பாராமல் எம்மை விட்டுப் பிரிந்துவிடுவார்கள். நிறைய சாதித்துக்கொண்டு இருக்கும் ஒரு பொழுதில் இன்னும் நிறைய சாதிப்பதற்கான மன உத்வேகத்தோடு இருக்கும் பொழுதில் இவ்வாறான இழப்பு இடம்பெற்று விடும். அவர்கள் விட்டுச் செல்லுகின்ற உயர்ந்த இடைவெளிகளை நிரப்ப வேறு யாரும் முழுமையாகத் தயாராகுவதற்கு முன்னதாகவே எம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக துடியாட்டத்தோடு இயங்கக் கூடிய இளம் வயதிலும், புதுமையாகச் சிந்திக்கக்கூடிய இளம் மனதோடும் இருக்கும் போதே இவர்களை நாம் இழந்து விடுகிறோம். இத்தகைய இழப்புக்கள் ஆற்ற முடியாத பேரதிர்ச்சியையும் தாங்க முடியாத கடுந் துயரத்தையும் ஒரேயடியாகத் தூக்கி எங்கள் இதயங்களின் மீது போட்டு விடுகின்றன.

விஜயன் அண்ணையின் இழப்பும் அத்தகைய ஒரு பேரதிர்ச்சியையும் கடும் வலியையும் தான் எம் எல்லோருக்கும் தந்துவிட்டிருக்கின்றது.

அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்று சொன்னால் அது மிகை ஆகாது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தை பிரித்தானியாவில் நிறுவி வளர்த்தெடுப்பதற்கு அவர் ஆற்றிய பணிகளும் உழைப்பும் என்றைக்கும் எங்களால் மறக்க முடியாது.

நண்பர்களாகிய நாம் எல்லோரும் வெறுமனே கூடி மகிழ்ந்து பிரிந்து செல்லும் ஓர் தளமாக மட்டும் எமது சங்கம் இருந்துவிடாமல், எமது சமூகத்திற்கு நற்பணிகளை ஆற்றும் ஒரு செயற்பாட்டு மையமாகவும் அது திகழ வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்காகப் பாடுபட்டார். தனது தனிப்பட்ட வாழ்வில், அதற்கு ஒரு முன்னுதாரணமாக அவர் திகழ்ந்தார்.

விஜயன் அண்ணை பற்றியும், எமது பாடசாலையின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் பற்றியும் குறிப்பிடுகின்ற போது, அவரது தாயார் சரஸ்வதி ஆசிரியர் பற்றிக் குறிப்பிடாது விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவில் மட்டும் அல்லாது நோர்வே, சுவிற்சலாந்து பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குத் தாயும் மகனுமாகப் பறந்து சென்று அதுவும் தமது சொந்தச் செலவில் சென்று அந்த நாடுகளிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர் சங்கக் கிளைகளை உருவாக்க அவர்கள் எடுத்த முயற்சிகள் அவர்களது சமூகப் பற்றுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

விஜயன் அண்ணை கடைசியாக எமது சங்க உறுப்பினர்கள் சிலரை சந்தித்தபொழுது எமது பாடசாலைக்காக indoor game centre ஒன்றை தனது சொந்த செலவில் உருவாக்கித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார். வசதிகள் படைத்தவர்கள் எல்லோரும் வாரிக் கொடுத்து விடுவதில்லை. கொடுக்க வேண்டும் என்ற தேவையை உணர்ந்ததாலும், கொடுக்கக் கூடிய மனம் படைத்தவராய் இருந்ததாலுமே அவரால் கொடுக்க முடிந்தது.

அவர் எமக்கு நல்லாலோசனைகளை வழங்கினார். எமது சங்கமும், எமது பாடசாலையும், எமது ஊரும் செழித்து உயர வேண்டும் என்பதில் அதீத அக்கறை காட்டினார். தனது கருத்துக்களை ஒருபோதும் மற்றவர்களுக்கு திணிக்க முயல்வதில்லை, விவாதங்கள் எழுகின்ற போதெல்லாம் சின்ன ஒரு புன்னகையுடன் சமயோசிதமாக பேசி நிலமையை சமாளித்து காரியத்தை முன்னெடுத்துச் செல்வதில் வல்லவர். அத்துடன் தன்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என்றும் விரும்புவார்.

தனது அனுபவத்தை, தனது நேரத்தை, தனது அறிவை, தனது வளங்களை எல்லாவற்றுக்கும் மேலாக எந்த நெருக்கடியான சமயத்திலும் நிதானம் தவறாமல், பதற்றம் இல்லாமல் காரியங்களைக் கையாளும் திறமை என தன்னால் முடிந்த அனைத்தையும் எமது சமூகத்தின் உயர்வுக்காக அவர் தந்தார்.

இவரது இழப்பு எமது சங்கத்திற்கும் எமது சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்று. விஜயன் அண்ணையின் எண்ணம் போல எமது சங்கத்தின் செயற்பாடுகளை வளர்த்துச் செல்ல உறுதி பூண்டு எமது சங்கத்தின் சார்பில் அவருக்கு அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!

நன்றி – வணக்கம்!

S.கோகுலரமணன் (தலைவர்)
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பிரித்தானிய கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

வானிலே தோன்றும் வானவில்லின் தோற்றம் தோன்றுவதும் மறைவதும் அறிதற்கு அரியது. இதனை மானிட வாழ்வில் ஐயப்ப பக்தனாக வாழ்ந்து காட்டிய விஜயனின் வாழ்க்கை பொருந்தும். வானவில்லின் ஒளிக்கீற்றில் இருந்து ஒரு சில கதிர்களை உங்களுடன் பகிர்கிறோம். ஈழம் தந்த சாவகச்சேரியில் பொன்னம்பலம் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வனாக அவதரித்து தனது ஆரம்பக்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பல இன்னல்களுக்கு மத்தியில் தந்தையை இழந்தும் தாயின் பெருமுயற்சியில் இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்து இலங்கையில் போர்ச்சூழல் காரணமாக மேற்கத்தைய நாடான இங்கிலாந்தில் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இவருடைய திருமணபந்தம் ரஞ்சினியைக் கைப்பிடித்து பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்ற வாழத்துக்கிணங்க மழலைச் செல்வங்கள் மூன்றை ஈன்றெடுத்து ஆனந்தமாக வாழ்ந்து வரும் வேளையிலே சபரிமலை ஈசனாம் ஐயப்பனின் கருணை கொண்டு கிருஷ்ணன் ஸ்ரீதரன் குருசாமியால் ஆட்கொள்ளப்பட்டார். இதன் பலனாக இன்றைய அறங்காவலர் சபையில் தன்னையும் ஒருவனாக இணைத்து ஹரோவீல்ட் பதியில் அருள் ஆட்சி செய்கின்ற ஹரிஹரசுதனின் அருளை அடியவர்கள் பெறுவதற்கு மூலகாரணமானவர்.

இவர் தன்னுடைய சகாக்களுடன் 2008ம் ஆண்டு ஆவணி மாதத்தில் பரிவார மூர்த்திகளுடன் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) கண்ட பெருமகனாவார்.

இதனைத் தொடர்ந்து இவ் ஆலயத்தின் சிறப்பாக அலங்கார உற்சவங்கள் மற்றும் மண்டல பூர்த்தி கண்ட சுவாமிகள், சபரிமலை யாத்திரை நிறைவு கண்ட சுவாமிகள், இன்னும் பல கன்னிச் சுவாமிகள், இப்படியாக ஐயப்பன் ஆலயம் இலண்டனிலே சிறந்து விளங்குகிறது.

இத்தனை சிறப்புக்களையும் கண்ட விஜயராஜன் (விஜயன்) அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஹரோவீல்ட் ஹரிஹரசுதன் ஐயப்பனின் பாதம் பணிவோமாக.

ஓசாந்தி சாந்தி சாந்தி!

சரணம் ஐயப்பா

இங்கனம்

ஆலய அறங்காவலர், சபையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நண்பா,

ஒரு நல்ல நண்பனாக, ஒரு தோழனாக உனது குறுகிய, ஆனால் இனிமையான, வெற்றிகரமான வாழ்க்கையை மற்றவர்களுடன் பகிரந்து கொள்ள விரும்புகிறேன்.

உன்னை ஒரு நண்பன் என்ற கோணத்திலிருந்து பார்க்கும்போது, நீ உண்மையில் எனது இளைய சகோதரனோடு தான் படித்திருந்தாலும், எனது குடும்பத்திலுள்ள எல்லோருடனும் நன்றாக, தோழமையுடன் பழகினாய். நாங்கள் பல பயணங்களை ஒன்றாக மேற்கொண்டிருந்தோம். சில பயணங்கள் பொழுது போக்கிற்காக, சில சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வளர்ச்சிக்காக மற்றும் சில தல யாத்திரைக்காக. பயணக்களை தெரியாமல் கலகலப்பாக பேசி எல்லோரையும் உற்சாகப்படுத்தி மகிழ்ச்சியாக வைத்திருப்பது உனக்குத் கை வந்த கலை.

நான் எந்த ஒரு விஷயத்தை கேட்டாலும் நீ ஒரு நாளும் மறுப்புத் தெரிவிக்காமல் வெற்றிகரமாக முடித்துத் தருவாய். இது எனக்கு மட்டுமல்ல உனது எல்லா உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் எல்லோருக்குமே தான். இது உனது ஒரு விசேட குணாதிசயம். இந்த நல்ல குணம் உனக்குப் பல நண்பர்களை உருவாக்கித் தந்துள்ளது.

நீ எல்லோரினதும் அழைப்பை ஏற்று, அதற்கென நேரத்தை ஒதுக்கி, எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பாய் நீ Facebookல் பகிரும் படங்கள், பகிடிகள், கருத்துக்கள், தகவல்கள், எல்லாம் மிகவும் Interesting ஆக இருக்கும். அவற்றைப் பார்த்து நான் மனம் விட்டுச் சிரிப்பதுண்டு. ஒவ்வொரு நாள் காலையிலும் நீ என்னுடன் 5, 10 நிமிடங்கள் தவறாமல் கைத்தொலைபேசியில் அழைத்து அளவளாவி பகிடி விடுவது, அந்த நாளைத் தொடங்குவதற்கு புத்துணர்ச்சியைக் கொடுத்தது.

நீ holidayக்கு போனால் எனக்கு bore அடிக்கும். உடனே அருளும் phone பண்ணி, இவன் விஜயன் holiday க்குப் போட்டானே? எப்போ திரும்பி வருவான், bore அடிக்குது என்று தொடங்கி விடுவார். அந்தளவுக்கு எங்கள் எல்லோருடனும் நீ நெருக்கிய சிநேகிதம் வைத்திருந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கு நீ வழங்கிய பங்களிப்பைப் பற்றி மற்றவர்களுக்கு தெரியாத சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எமது CHC OSTA-UK Assoication 20 வருடங்களைப் பூர்த்தி செய்து 21வது வருடத்தில் அடி எடுத்து வைத்துள்ளது.

This is one of the strongest and longstanding Tamil Organisation in the UK. இதை நிறுவுவதற்கு நீயும், உனது தாயாரும் முக்கிய காரணகர்த்தாக்களாக இருந்துள்ளீர்கள். அப்போது நீ ஒரு சிறிய வீட்டில் வசித்திருந்த போதும் அந்த இடத்தை முதலாவது கலந்துரையாடலை நடத்துவதற்கு மனமுவந்து அளித்திருந்தாய். அந்த வருடம் தான் எனது திருமணம் நடந்தது. நீ இப்போது ஒரு family man. கட்டாயம் நீ இந்த சங்கத்திற்கு உன் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என என்னை தந்திரோபாயத்துடன் இச் சங்கத்தில் என்னை இணைத்துக் கொண்டாய்.

கடந்த 20 ஆண்டுகளில் எமது சங்கம் பல மேடு பள்ளங்களைத் தாண்டியுள்ளது. நீ தொடர்ந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக முழு மூச்சுடன் உன் பங்களிப்பைச் செய்திருந்தாய்.

எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்களோ இல்லையோ உனது முன்னெடுப்பில் ஒரு சிறிய கட்டிடத்தில் இடப்பிரச்சினையுடன் இயங்கி வந்த தமிழ்ப் பள்ளிக் கூடம் இன்று நவீன கட்டடங்களுடன் சிறுவர்கள் ஓடி விளையாடக்கூடிய ஒரு பெரிய இடத்தில் எமது சங்கத்தின் பங்களிப்போடும் SDZ இன் உதவியோடும் வெற்றிகரமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நீ, என்னுடனும், பரமானந்தத்துடனும் ஒன்றாகப் பயணித்து France, Switzerland, UK இல் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களை ஒருங்கிணைக்கப் பாடுபட்டாய்.

எமது சங்கம் 20 வருடங்களாக இயங்கியிருந்தாலும், இந்த வருடம் தான் UK கிளையின் சங்க உறுப்பினர்கள் France க்கும், France கிளை உறுப்பினர்கள் UKக்கும் சங்க நிகழ்ச்சிகளில் பங்கு பற்றச்சென்றார்கள். இதுவும் உன்னால் நிறைவேறிய ஒரு நிகழ்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பன் கோவிலை நிறுவுவதற்கும் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்ததுடன் உனது பல நண்பர்களை சபரிமலைக்கு அழைத்துச் சென்றாய். அத்துடன் மேல் மருவத்தூர் மன்றத்தினர் தமது பூசைகளை நடாத்த இடமின்றி தவித்ததை நான் உன்னிடம் கூறி ஐயப்பன் கோவிலில் இடம் எடுத்துக் கொடுப்பாயா? என்று கேட்டவுடன், நீ மறுப்புக் கூறாமல், உடனடியாக அவர்களுக்கு அந்த இடவசதியை, ஐயப்பன் செயற் குழுவினருடன் கதைத்து ஒழுங்கு செய்து கொடுத்தாய்.

"ஒரு திருமணத்தை நடத்தி முடித்தால் பலகோடி புண்ணியம்" என்பது சைவ சமய ஐதீகம், நீ உனது உறவினர்கள், நண்பர்கள் பலருக்கு திருமணங்களை நடாத்தியும், அவர்களுக்குத் "தத்தம்" பண்ணியும் உதவியுள்ளாய்.

God does not look at how big a house you live in, but he looks at how many people you entertain in your house. You definitely entertained enough people in your house. As the name "GOD" suggests he is the Generator," Organiser and Destroyer. We can not escape this cycle. I am sure you have earned enough credit to go to the next level up.

எனது ஆழ்ந்த அனுதாபங்களை எனது குடும்பத்தின் சார்பிலும், எமது சங்கத்தின் சார்பிலும், இந்துக் கல்லூரியின் சமூகத்தினர் சார்பாகவும் தெரிவித்து, உனது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

அன்பு நண்பன்

வெற்றிவேலு அசோகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக தொண்டனின் நினைவுகள்

2008ம் ஆண்டு ஹரோ ஐயப்பன் சந்நிதானத்தில் தொண்டனாக அறிமுகமான திரு. விஜயன் மிக விரைவில் நல்ல ஒரு நண்பரானார். தனிப்பட்ட அவரது குணாதிசயங்கள் அவர்பால் எங்களை ஈர்த்தது. நிர்வாகப் பணிகளின்போது முகத்துக்கென்று நீதி வழங்காது நியாயம்பால் திடமாக இருந்தார். பொதுப்பணிகளில் தன்னை மனதார ஈடுபடுத்திய தொண்டன்.

அடுத்த தலைமுறையினரும் எமது சமயப் பணிகளைத் தொடரவேண்டும் என்று இளம் தலை முறையினருக்கு உற்சாகம் வழங்கி வந்ததை அனைவரும் அறிவர். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துடன் கூடிய ஈடுபாடு காட்டி வந்தவர். அனைத்துக்கும் மேலாக யாரையும் மனம் நோகக் கதைக்கத் தெரியாத சுபாவமுடையவர். எந்த ஒரு சூழ்நிலையிலும் தனது புன்சிரிப்பை இழக்காது விடயங்களை நகர்த்திச் செல்லும் சாமர்த்திமுடையவர் விஜயன்.

எனது காரியாலயம் வரும்போது புன்முறுவலுடன் அனைவரையும் சுகம் விசாரிப்பார். மிகவும் அமைதியாக உரையாடுவார். அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல இழப்பு எமக்கும் கூடத்தான். கூட இருந்த நண்பர்களுக்கும் ஐயப்பன் அடியார்களுக்கும் இது மாபெரும் இழப்பு! ஆறாத்துயர்!. பிள்ளைகள்மீது கடும் பாசம் கொண்டவரின் இழப்பை ஈடுசெய்வது எளிதல்ல.

வாழ்வில் எப்படி நடந்தோம் என்பதற்கு அவர்களது இறுதி நாள் நிகழ்வுகள் சான்று பகரும் என்பார்கள். செப்டம்பர் 8ம் திகதி ஒரு வேலை நாளான போதும் அவரை வழியனுப்ப வந்த ஆயிரக்கணக்கானோர் எண்ணிக்கை இதற்குச் சான்று பகரும். சாவகச்சேரியில் பிறந்தவருக்குச் சாவு, நாகரிகம் வளர்த்த கிறீஸ் மண்ணிலா அமைய வேண்டும்? எமக்கு அம்மண்மீது அதனால் சிறு கோபமும் கூட. இருந்தும் இயற்கை விதியை யார்தான் மாற்றமுடியும்? அவரது பிரிவுத் துயரில் பங்குகொண்டு அவர் தம் மனைவி பிள்ளைகளைத் தேற்றுவது எமது கடனாகும். நண்பனுக்குச் செய்யும் கைம்மாறும் இதுவே!

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்போம்!...

எஸ் ரவீந்திரன் (சட்டத்தரணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பேரன்புக்குரிய விஜயன்

விஜயன் பிறந்தது, அவரது குழந்தைப்பருவம், அவரது பாடசாலைப்பருவம் எல்லாம் எனது மனக்கண்முன்னே வந்து போகின்றன. விஜயன் இளமைப்பருவத்திலேயே ஒரு கொள்கைப் பிடிப்புடையவராகவும், பொதுச் சிந்தனையுள்ளவராகவும் காணப்பட்டார். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியை பயின்ற விஜயன், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் இந்தியாவுக்கு சென்று தனது மேற்படிப்பைத் தொடர்ந்தார். மேற்படிப்பை பூர்த்தி செய்த விஜயன் இந்தியாவிலிருந்து பிரித்தானியாவுக்குச் சென்றார்.

பின்னர் விஜயன் தனது தாயாரையும் பிரித்தானியாவுக்கழைத்து இருவரும் பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் வேளையில் தனது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என விஜயன் உதவியால் பிரித்தானியாவுக்கு சென்றவர்கள் அநேகர். விஜயன் அனைவரையும் தனது உறவினர்களாகத்தான் பார்ப்பார். விஜயன் மூலம் தொழில் பெற்றவர்கள், திருமணம் செய்து கொண்டவர்கள், நிதியுதவி பெற்றவர்கள் ஏராளம் ஏராளம். விஜயன் என் மூலம் எத்தனையோ ஏழை, எளியவர்கள் வாழ்க்கையில் ஒளியூட்டியதை நான் அறிவேன். எத்தனை பேருக்கு கிணறு, மலசலகூடம், வீடுகட்ட உதவி மின்சாரம் பெற உதவி, பிள்ளைகள் கல்வி கற்பதற்காக உதவி, போரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி அப்பப்பா எண்ணிலடங்காது.

விஜயன் தான் கற்ற பாடசாலைகளை தனது உயிருக்கும் மேலாக நேசித்து வந்தார். சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு தாமோதரம்பிள்ளை வீதியில் ஒரு காணியைக் கொள்வனவு செய்வதற்கு விஜயனும், அவர் தாயாரும் பிரித்தானியாவிலுள்ள தனது நண்பர்கள் அன்பர்களுடன் சேர்த்து திரட்டிய ரூபா பத்து இலட்சத்தை தனது தாயார் சகிதம் பாடசாலையில் கொண்டு வந்து ஒப்படைத்த காட்சி இன்னும் எனது மனக்கண் முன்னே நிழலாடுகின்றது. பிரித்தானியா சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்திற்கு தூணாக நின்று அதன் தலைவராக, இறுதியில் காப்பாளராக வழிநடத்தி சென்று விஜயனுக்கு அல்லும், பகலும் தான் கற்ற பாடசாலைகளின் எண்ணம் தான் இருந்தது.

இந்து ஆரம்ப பாடசாலைக்கு ஒரு அழகான பூந்தோட்டத்துடன் கூடிய முற்றத்தை தனது செலவில் அமைத்து வழங்கியிருந்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக ஒரு கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் சளைக்காது உழைத்து வந்ததை யான் அறிவேன். இந்த நூற்றாண்டு மண்டப பணிக்கான முதலாவது நிதிப்பங்களிப்பை விஜயன்தான் வழங்கியிருந்தார்.

விஜயனின் இன்னுமொரு ஆசையை அதாவது மனைவி, மகளுடன் கிறீஸ் நாட்டுக்குப் போவதற்கு முதல் நாள் சொல்லியிருந்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு பின்புறம் (முன்னர் சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை இயங்கிய Rail Block என்ற கட்டடம்) உள்ள மண்டபத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு உள்ளக விளையாட்டு மையம் (Indoor Game Centre) ஒன்றை தனது சொந்த செலவில் செய்ய விரும்புவதாக கூறினார்.

விஜயன் நீங்கள் விடுமுறை முடித்துக்கொண்டு வாருங்கள் விரிவாக கதைத்து செய்வோம் என கூறினேன். இது விஜயனின் இறுதியாசையாக இருக்குமென நான் எண்ணவேயில்லை. விஜயனின் மறைவு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மட்டுமல்ல விஜயனின் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்குமொரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

விஜயனின் ஆத்மா சாந்தி பெறவும், அவர் தாய், மனைவி, பிள்ளைகளுக்கு நல்ல மனவுறுதியை வழங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**யோகேஸ்வரன் ஜெயக்குமார்**
**செயலாளர்**
**சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**சாவகச்சேரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

நாம் எதை நம்ப முடியாதிருந்ததோ, அதை நம்பும்படியாக நண்பன் விஜயனின் இழப்பு எம்முன் ஓர் அதிர்வை ஏற்படுத்தி விட்டது. இவரின் நினைவு மலருக்கு அஞ்சலிச் செய்தி அனுப்புவதில் மிகவும் வேதனை அடைகின்றேன். தவிர்க்க முடியாத இயற்கை நியதி காலந்தான் கவலையை ஆற்ற வேண்டும். என்றும் மறக்க முடியாத ஐம்பது ஆண்டு உறவு இது.

அமரரின் நினைவுகளை மீட்டு அசை போட வைத்து எழுதுவதற்கு விடயங்கள் பலவுண்டு. மனவேதனை, உள்ளத்தில் கவலை, எழுத்தை நனைக்கும் கண்ணீர் நண்பனின் நினைவுகள் பற்பல.

- பழகியவர்கள் இலகுவில் மறக்க மாட்டாத உருவம்
- கவரும் புன்சிரிப்பு, அதில் ஒரு குறும்புத்தனம்
- மற்றவர்களைப் புண்படுத்தாத பண்பாளன்
- பல்கலை நிபுணத்துவம்
- அசாத்தியமான துணிச்சல்
- தளர்வறியா செயற்திறன்
- வியக்க வைக்கும் ஆற்றல்
- மனித நேயம், குடும்ப விடயங்களில் ஈடுபாடு
- தனது தீர்மானத்தை நூறுவீதம் செயற்படுத்தும் திறன்
- பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு

நெறி மிகுந்த ஒழுக்க சீலரான விஜயன் அவர்கள் தனிப் பிள்ளையாக பிறந்து வளர்ந்து தனது சிறுவயதில் தந்தையாரை இழந்துங் கூட ஊர் உறவுகளுடனும் மனைவி பிள்ளைகளிடத்திலும் நண்பர்களிடத்திலும் அன்புத் தெய்வமாகிய தாயாரிடத்திலும் ஒன்றுவிட்ட சகோதரங்களுடனும் ஆழமான அன்பும் பாசமும் காட்டி வந்தார்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் பெறுமதி அவர் வாழும் வாழ்க்கையில் அமைந்தது. விஜயன் அவர்கள் ஊர் உறவுகளுடனும், உற்ற நண்பர்களிடமும் அறிவு ஜீவிகளுடனும் சமூக ஆர்வலர்களுடனும் மிக மிக எளிமையாக உரையாடி அவர்தம் கருத்துக்களை உள்வாங்கி அதற்கேற்ப செயல் வடிவம் கொடுத்து செயற்படுத்துவதிலும் வல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோன்றில் புகழோடு தோன்றுக – அ∴திலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து எம்மை எல்லாம் இடைநடுவில் விட்டுப்பிரிந்த விஜயன் அவர்களின் இறுதிக் கிரியையில் வந்த மக்கள் கூட்டம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது.

எமது குடும்ப நிகழ்வுகள் எதுவானாலும் நண்பர் என்ற பதத்திற்கு மேலாக குடும்ப அங்கத்தவர் போல் அவர் தம் குடும்பத்தினருடன் வந்து கலந்து சிறப்பித்தமை என்றுமே மறக்க முடியாது.

பிறந்தோம் இறந்தோம் என்றில்லாமல் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்பதே இவரின் இலட்சியம். அதை சாதித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இங்கே கடமை முடிந்ததென்று இறைவன் அவருக்கு வேறு கடமைகள் வழங்க அழைத்துவிட்டார் போலும்.

அமரர் விஜயன் அவர்கள் ஆற்றிய சேவையின் சிறுபகுதியினையாவது நாம் ஆற்றுவது அவருடைய ஆத்மாவிற்கு நாம் செய்யும் காணிக்கையாகும். எம்மையெல்லாம் மீளாத்துயர் கொள்ள வைத்த அமரத்துவரின் செயற்பாடுகள் எமது உயிர் இருக்கும் வரை நினைவிருக்கும்.

அவரின் பூதவுடம்பு அழிந்ததே தவிர அவரின் புகழ் உடம்பு என்றும் நிலைத்திருக்கும். அவரது ஆத்மா சாந்தியடையவும் சிவனருட்பாதம் சென்றடையவும் பிரார்த்தித்து அவர் குடும்பத்தின் மனம் அமைதி அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. த. பரமானந்தம் (ஆசிரியர்) குடும்பத்தினர்
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் எங்கள் விஜயன்

கனவு போல இருக்கிறது. நீங்கள் காலமான செய்தி கேட்டுத் துடித்துத் துன்பத்தில் மனம் திணறிப் போனது. இன்றுவரை நம்ப முடியாத கனவு போல இருக்கிறது. காலையில் தொலைபேசியில் அழைப்பு வரும்போது உங்கள் அழைப்பாக இருக்குமோ என்று இன்னமும் மனதில் நப்பாசை வருகிறது. உங்களிடம் இருந்து அழைப்பு இனி வரவே வராது என்பதை ஏற்றுக்கொள்ள மனம் மறுக்கிறது.

பழகுவோரை மட்டுமன்றி பழக்கமில்லாதோரையும் பரிவுடன் அணுகும் உங்கள் அன்பும், கருணை சொரிகின்ற செந்தழிப்பான சிரித்த முகமும் எங்கள் நெஞ்சம் விட்டு என்றும் அகலாது. நீங்கள் உறவுமுறையில் மருமகனாக இருந்த போதிலும் பழகும்போது நெருங்கிய நண்பனாகத்தான் பழகினீர்கள். கடந்த வருடப்பிறப்பன்று எங்கள் வீடு வந்து எங்களுடன் சிரித்துச் சாப்பிட்ட பொழுதுகளை நினைக்கும்பொழுது, நெஞ்சில் துன்பம் நிறைந்து கனக்கின்றது.

உங்களின் இழப்பின் தருணத்தில் உங்களின் சிறந்த குணங்களையும் நல்லியல்புகளையும் ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கிறோம். இந்துக் கல்லூரி தாயின் மீது நீங்கள் கொண்டிருந்த பற்று அளப்பரியது. உங்கள் செழுமையான சேவையைத் திடீரென்று இழந்து தவித்து நிற்கிறோம்.

உங்களுடன் சேர்ந்துலாவிய இடங்களும் நீங்கள் இல்லாத சாவகச்சேரி இந்துக்கல்லூரி கூட்டங்களும் எங்கள் வேதனையை மேன்மேலும் கூட்டுகின்றன. இனி வரும் எந்த வைபவத்திலும் உங்களுக்கான இடம் எவராலும் நிரப்ப முடியாது வெற்றிடமாகவே இருக்கும்.

எனினும் காலனின் கைநூலில் ஆடும் பொம்மைகள் நாங்கள் என்றும் காலத்தின் நியதியை எவர் வெல்லக்கூடும் என்றும் பலவாறு எண்ணி எங்கள் மனங்களைத் தேற்ற முயல்கிறோம்.

இத்தருணத்தில் உங்களின் திடீர் இழப்பினால் துயருறும் உங்கள் அம்மாவினதும் குடும்பத்தினரினதும் மன ஆறுதலுக்காகவும் உங்கள் இன்னுயிர் சாந்தியடைவதற்காகவும் இறைவனின் திருப்பாதங்கள் பணிகின்றோம்.

**We will miss you forever Vijayan.**

தங்கு, அமிர்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்த வயதில் நிறைந்த விஜயன்

அன்பு, அமைதி, அரவணைப்பு, உபசரிப்பு, புன்னகை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, களிப்பு ஆகிய உருவற்ற இவ்வார்த்தைக்கு மதிப்பை உருவாக்கி உயர்வாய் வாழ்க்கை நடாத்திய பெருமகன்தான் எமது விஜயன்.

இரு தலைசிறந்த ஆசிரியர்களின் தவப்புதல்வன் தனிமகன் தந்தையின் அரவணைப்பைச் சிறிய பராயத்தில் இழந்தபோதும் தாயாரின் வழி நடத்தலால் கல்வியில் சிறந்து மேலோங்கி பிரித்தானியாவில் நிரந்தர வசிப்பிடத்தைப் பெற்று, முதலில் தனது தாயாரைக் கூப்பிட்டுத் தனது விவாகத்தையும் செய்து படிப்படியாக முன்னேற்றம் அடைந்தார்.

தனது உறவினர்களையும் மேலும் வேண்டியவர்களையும் வழிடாத்தி அவர்களையும் உயர் நிலையில வைத்து வாழ வழிவகுத்தவர். தான் கல்வி கற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டார். இப்பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்று சேர்த்து கல்லூரியை மெருகூட்டி பழைய மாணவர்களை உற்சாகப்படுத்தி வந்தார். மேலும் பல திட்டங்களை தீட்டிய வண்ணமே இருந்தார்.

தாயாரில் மிகவும் பாசங்கொண்டவர். அவரை நோய் நொடியின்றி வாழவைக்கவேண்டுமென்று அதிசிரத்தை கொண்டவர். தாயார் ஒரு மகனைப் பெற்றாலும் இப்படியான ஒரு உன்னத மகனைப் பெற்றமை பெருமையாகுமென அவர் உயிரோடு இருக்கும்போதே பலரும் புகழ்ந்துள்ளார்கள். விஜயன் எவ்வளவு கலம் வாழ்ந்தார் என்பதைவிட இவர் செய்த பலரக விடயங்களை எவராலும் மறக்க முடியாது. இப்புகழ் இவரைப் பெற்ற தாயாரையும் சேர்ந்ததாகும்.

தனது மனைவி மக்களையும் தனது பாசவலைக்குள் உட்படுத்தி பக்குவமாக நடாத்தி வந்தார். பிள்ளைகள் தமிழ் கலாச்சாரத்தின்படியான வழக்க வழக்கங்களுக்கு பழக்கப்பட்டமை ஒரு பெரிய சாதனையாகும். இவர் சடுதியாக இவர்களைப் பிரிந்தாலும் இவர்கள் வாழ்வதற்காக பாதைகள் அமைத்துக் கொடுத்துள்ளார்.

மனிதர்களுடன் மட்டுமல்ல இவர் தெய்வங்களுடனும் பலவித ரூபத்தில் ஈடுபாடானவர். நடந்தவையாவும் இறைவனின் செயலே



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என மன அமைதியைப் பெறுவோமாக, இவரது இறுதி யாத்திரை சுந்தரமூரத்த்தி நாயனாரும் சேரமான் பெருமான் நாயனாரும் முறையே வெள்ளை யானையிலும் குதிரையிலும் திரு அஞ்சைக்களத்திலிருந்து கைலாயம் போன கதைபோலக் காட்சியளித்தது.

விஜயன் பிறந்தநாள் தொடங்கியே எம்முடன் மனதில் ஐக்கியமானவர். இதுவரை எமது உறவு இவர்களுடன் பல ரூபத்தில் வளர்ந்து கொண்டே போனது இவரை எம்மால் மறக்க முடியாது.

வந்தவர் எல்லாம் போவது உண்மை. பூவுலகில் மானிடராய் பூத்து பொலிந்து உதிர்ந்தோர் கோடான கோடி. நிலையல்லா வாழ்வு என்றும் நிலைப்பதில்லை. அமைதியாக பயணிக்கும் உங்கள் ஆன்மா இறைபதம் சேர மலர்தூவிப் பிரார்த்திக்கின்றோம். பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

திருமதி யோ. திருச்செல்வம் குடும்பத்தினர்
தாமோதரப்பிள்ளை வீதி
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா! நிரந்தர தூக்கமா?

திருவள்ளுவரின் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்ற குறளுக்கு இலக்கணமாக இணைபிரியாத நண்பர்களாக வாழ்ந்த நாங்கள் இன்று உன் அன்பிற்கு ஏங்கித் தவியாய்த் தவிக்கின்றேன்.

அண்ணாவின் நண்பனாக வீட்டில் வந்து சேர்ந்து அண்ணா என்ற அழைப்புடன் தொடங்கிய உறவு இந்தியாவில் படிக்கும் போது அண்ணன் பாசம் நண்பன் என்ற அர்த்தத்தை தொட்டு நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தோம். நாம் இருவரும் வேறு நாடுகளுக்கு சென்றாலும் எங்கள் நட்பை நல்ல முறையில் பேணி வந்தோம்.

நீண்ட நாட்களின் பின் நாம் இருவரும் இந்தியாவில் எனது வீட்டில் சந்தித்து இரவு உணவு விடுதிக்கு சென்று உணவருந்திவிட்டு வீடு வந்து சுவாரசியமாக பல கதைகளைப் பேசிச் சிரித்துக் கொண்டிருக்கையில் சிரிப்பின் மிகுதியால் நான் மயங்கியபோது என்னை வைத்தியசாலை அழைத்துச் சென்று மருந்து எடுத்துக்கொண்டு வந்து உறங்க வைத்தாய். நான் குறட்டை சத்தம் போட்டு தூங்கிக் கொண்டிருந்தேன். குறட்டைச் சத்தம் நின்றதும் என்னை தட்டி எழுப்பினாய். இரண்டாம் தடவையும் தட்டி எழுப்பும்போது நான் ஏன் என்னை எழுப்பினாய் என்று கேட்டதற்கு புன்சிரிப்புடன் நீ நிரந்தரமாக தூங்கிவிடக் கூடாது என்றுதான் எழுப்பினேன் என்றாய்.

இன்று நான் உன் துயரச் செய்தி கேட்டுப் பறந்து வந்து உன்னை எழுப்பினேன். நீ ஏன் என்னை எழுப்புகிறாய் என்று என்னைக் கேட்காமல் நிரந்தரமாகவே தூங்கிவிட்டாய். நான் உன்னை எழுப்பும் இந்த ஏக்கம் உனது செவிகளுக்கு எட்டாவிட்டாலும் எனது நெஞ்சுக்குத் தெரிவதை என்னால் உணரமுடிகிறது. நண்பா உனது இந்த இழப்பை எண்ணி நான் நடுக்கடலில் நங்கூரம் இல்லாத கப்பல் தத்தளிப்பது போல் தவிக்கின்றேன். இப்பிரிவானது உனது நட்பின் இயல்புகளை அளந்து அறிந்து கொள்ள உதவும் அளவுகோலாக அமைந்துள்ளது. இதுதான் எங்கள் நட்பின் இடைவெளியா என்று கலங்கி புலம்பும் உன் அன்பு நண்பன்.

வி. ஸ்ரீ – கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்கமுடியுமா...

மனிதன் என்ற பதத்திற்கு இலக்கணம் பதித்தீரே
செவி சாய்த்து செய்காரியம் நேரமறிந்து செய்திடுவீரே
ஒழுக்கமே உயர்வு என பாசமாய் பணிந்திடுவீரே
ஒற்றுமைப் பண்பை பாங்காய் எடுத்துரைப்பீரே

ஊரவர்கள் உறவினர்கள் நிகழ்வுகளில்
தூரநின்று பார்க்காமல் தேடிவந்து உதவியவர்
கடிந்திங்கு ஒருவார்த்தை பேசியதை நாமறிவோம்
துடிக்கும் எம் இதயங்களில் என்றுமே நிலைத்திருப்பீர்

சேர்ந்த கோர்வையாய் கூடி வாழ்வதற்கு
கொடுத்து நாம் வைக்கவில்லை இந்தக் குவலயத்தில்
சோர்வுற்று நலம் குன்றி நலிவுற்றுப் போனோமே
சோகம் ததும்பி நெஞ்சு புண்ணாகிறதே

மௌனத்தில் அமைதி கொண்டு மௌனமாய் போனவரே
மறக்க முடியவில்லையே மறக்க முடியவில்லையே
இவ்வுலகம் உள்ளவரை உம் நினைவும் மாறாது
உன்னதமாய் உமது ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

சோக நினைவுகளோடு
நண்பன்
திரு. சி. தயாளன் குடும்பத்தினர்
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் கண்ணீர்ப்பூக்கள்

சின்னஞ்சிறு வயதில் சிங்கார நடை நடந்து
சிட்டுக்குருவிபோல் சிறகடித்து நிற்பாயே!
மன்னும் மழலை மொழி பல உவந்து
மாண்பு பெற வளர்ந்தாயடா?
மழலை வயதான ஐந்து வயதினிலே
தந்தையை இழந்த உன்னை
பள்ளி செல்லும்போது கைக்குள்ளே வைத்தேனே!
கைமீறிப் போனாயோ கடவுள் செய்த பாதகமோ!
கல்யாணக்காட்சி கண்டேன், பேரக்குழந்தை கண்டேன்
ஒரு பிள்ளை தான் என்ற ஏக்கத்தை மறைத்தாயே!
ஆலம் விருட்சம் போல் நீ ஆனாய் என்று
எம்மட்டு மகிழ்ச்சியிலே காலம் கழித்தேனே
கண்ணூறு பட்டதுவோ கல்லெறி பட்டதுபோல்
மின்னாமல் முழங்காமல் ஓடி மறைந்தாயே
நீ வேலைக்கு சென்று விட்டால் வீடு வந்து சேரு மட்டும்
கண்ணுறக்கம் ஏதும் இன்றி கண்விழித்து காத்திருப்பேன்!
இங்கிருந்து அம்மா உன்னை போகவிடமாட்டா என்றே
அங்கிருந்து காலனவன் கவர்ந்திட்டான் பாவியவன்
நீ எங்கே போனாலும் அங்கே வந்திடுவேன்
சொல்லாமல் கொள்ளாமல் என் மகனே ஏன் ஒழித்தாய்
என் ஆவி போகுதடா? என் மகனே பக்கத்தில் வா
உன்னுடனே நான் வருவேன் உத்தமனே நீ அறிவாய்!
அம்மா! அம்மா என்று அழைக்கும் ஒலி கேட்குதடா!
ஆசை மகனே நீ ஒருக்கால் வந்து பார்த்திடடா!

தவிக்கும்
அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் கண்ணீர் திவலைகள்

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
செம்மையுடன் எந்தன் கைப்பிடித்த தெய்வம் நீ
திருமண பந்தத்தில் இணைந்து என்னை
திடுமென்று விட்டுவிட்டு எங்கு சென்றீர்
சோதனைகள் வேதனைகள் எதுவரினும்
சோர்ந்திடாது அறிவுரைகள் பலசொல்லி
இம்மையிலே எல்லாச் சுகமும் எனக்களித்த என்னுயிரே
பொய்யையே வாழ்வென்று புரியவைத்து சென்றாயோ

தாய் போல் எனக்காரு தந்தையுமாய்ச் சுகமளித்தாய்
நேசமுடைய நல் நாயகனாகி நெகிழச் செய்தாய்
பிள்ளைகளைப் பிரிந்தே நீர் ஒரு கணமும் இருக்கமாட்டீர்
எப்படித்தான் மறந்தீரோ சொல்லுமையா
திக்குத்திசை தெரியாமல் தவிக்கவிட்டு எம்மை
பரமன் தாழ் பணிந்தீரோ சபரிமலையில்

பிரிவால் வாடும்
மனைவி
ரஞ்சினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Appa

**P**onnampalam, ponni, paul, pops
**O**h you had so many names
**N**evertheless I only had one name for you
**N**ow that is Dad,
**A**nd yet further, you became a friend
**M**re after, you became a business partner
**P**romise you, I will make you proud
**A**ll you have taught me, I'll teach others
**L**ove you always, no matter what
**A**nd you can trust me that,
**M**y memories of you will never fade.

**V**octorius you always were,
**I**ntelligent we always knew,
**J**oyful and vibrant your smile was,
**A**dventurous you was in life
**Y**oung you were
**A**dvanced us all like a true leader
**N**ever will be forgotten.

Keep Smiling Dad

Love Shan




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- செல்லையா + செல்லாச்சி
  - பொன்னம்பலம்
    - விஜயராஜன் + றஞ்சினி
      - சணன்
      - நிரோன்
      - சாரா
  - நாகராசா + இராஜேஸ்வரி
    - நிமலன்
    - குமணன்
  - இரத்தினபூபதி + சற்குணநாதன்
    - நவம்
    - வேணன்
    - நந்தினி
    - நந்தன்
    - சிறி
  - சிவபாக்கியம் + யோகநாதன்
    - சிவயோகம்
    - சிவசாந்தி
    - சிவயோகி
    - சிவரூபி
    - சிவராஜி
    - ஜோகானந்தி
  - இராசாத்தி + சுப்பிரமணியம்
    - லோஜினி
    - சுபாஷ்
    - சுதா
    - சுலோசினி
    - சுரேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To my best friend, soul mate and my amazing father.

You have always had the rare talent of taking the whole world's problems into your own hands and no matter how tough the obstacles may be through your road, you always manage a way to smile even when you stumble till you get there in the end.

You have created a legacy, where your philosophy of life was to achieve happiness for not just our family but for all those other people that you have touched, and I promise your legacy will continue through many generations to come.

I love you endlessly my daddy, may you smile forever and rest in peace.

*Love Son Neron*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To my favourite Dad,

My mind is still having trouble wrapping itself around the fact that you have gone.

I will take this special moment to turn my thoughts to my Dad. We lost a father with a heart of gold.

We think about you always, you will never been forgotten Dad. We hold you close within our hearts and there you will remain, to walk and guide us through our lives until we meet again.

I love you and you know I always will daddy...

Your loving daughter SARA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய தாய் ஆதங்கம்!

சின்னஞ்சிறு வயதில் உன் அம்மா பாடசாலை சென்றால்
என்னுடனே இருந்து மழலை மொழி பேசிடுவாய் நீ யார்
குழந்தை என்றால் அம்மா பெற்றவ அன்றி வளர்த்தவ என்பாயே
உன்னால் தானே சங்கீதம் கற்றேன் எங்கு படிக்கச்சென்றாலும்
என்னுடனே சுருதிப் பெட்டியும் தூக்கி வருவாயடா?
என்னவென்று மறப்பேன், என்னத்தை சொல்வேனடா? என்
மகனே! ஒன்று இரண்டா? ஒன்றென்றாய்ச் சொல்லுவதோ
நீ செய்த குறும்புகள் எத்தனையோ?
நீ வளர்ந்து வந்த பாதையெல்லாம் நினைக்கையிலே
நீ எனக்கு மகனாக இருந்தும் அடம்பிடித்து என்
திருமணத்திற்கு தோழனாக வந்தாயடா?
சித்தப்பா மறைந்தவுடன் அன்றி நான் இருக்கிறேன்
கலங்காதே என்றாயோ! இன்று கலங்க விட்டு போனாயே!
பிள்ளைகளைக் கூப்பிட்டு ஐவரானோம் என்றாயடா
என் பிள்ளை வாழ்க்கைதனை வளமாக்கி விட்டாயடா
கர்வம் இல்லா குழந்தை உள்ளம் கொண்டவனாய்
கனவிலும் மற்றவர்க்கு தீங்கு செய்யாய் என் மகனே
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்

சிறிய தாய்
திருமதி. சி.செல்வரா (திருமதி)

## கருணை உள்ளம் கொண்ட மருமகன் விஜயன்

எங்களை பிரிந்து விட்டாலும் எங்கள் நெஞ்சங்கள் ஆறா துயரோடும் உம் நினைவோடும் விழி நீரோடும், விளக்கின்றி இருளோடும், விண்ணோடு ஒரு வினாவோடும், விடி வெள்ளியாய் வழிகாட்டி இன்னுயிர் திறந்து இறையோடு கலந்த உமக்கு என்னுடைய கண்ணீர் மலர் தூவி அஞ்சலிக்கும் இந்நாளில் என்னுடைய ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்தும்,

உமது மாமி
திருமதி அ. தவராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசமுடன் பழகி

நேசமுடன் பழகி நெறியுடன் இனிதே வாழ்ந்து
பாசமுடன் பரிவையும் அள்ளி வீசி ஆசையாய்
எமை அரவணைத்து அன்புடன் வழி நடத்திய
மாசில்லா உங்கள் அன்பை நினைத்திடவே
மனம் உருகுதே அண்ணா
மாதவம் செய்தோம் உங்களை அண்ணனாய் பெற்றிடவே
நாதமாம் உங்கள் குரல் நாளும் இனி கேட்காதா
மாதம் பல மாறும், என்றும் மாறாது நம் சோகம்
ஈர விழிகளுடன்

நிமலன் குடும்பம்
குமணன் குடும்பம்.

## பாசமான மாமியின் உள்ளத்தில் இருந்து

அன்பினில் சிறந்தவனாய் அவனியில் உதிர்த்து
இல்லற வாழ்வில் நறுமணம் பரப்பி
உறவுகளை உயர்த்தினாய்
உத்தம புருஷனாய் பிறர் துயர் துடைக்கும்
அன்பு விழியானாய் வித்தைகள் புரிந்திடும் காரிய வீரனாய்
எல்லை இல்லா அன்பு உள்ளம் கொண்டவனாய்
இங்கிதமாய் வாழ்ந்திட்ட வேளைதனில்
கருணை இல்லா காலனின் கண் கெட்ட செயலால்
இமைகள் மூடி திறப்பதற்குள்
எல்லாம் முடிந்தது

அன்பு
கிளி மாமி (ஸ்ரீசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நிறைந்த எம் அண்ணனுக்கு
# நெஞ்சம் நெக்குருகும் நினைவுக்காணிக்கை

இனியவர்கள் மேல் இறைவன் அதிகமாய்
பிரியும் கொள்வதால்
தானா அண்ணா
உன்னையும் ஐயப்பன்
அழைத்து விட்டார்
தெவிட்டாத ஞாபகங்கள்
தெவிட்டாமல் இருக்கின்றது
அன்று தொட்டு இன்றுவரை
வாழ்க்கையை வசந்தமாக்கினீர்கள்
வாழ்ந்த காலத்தை மாண்புறச் செய்தீர்கள்
துள்ளலாகவும் துடுக்காகவும்
இனிய பேச்சாலும் அழகிய சிரிப்பாலும்
அனைவரையும் கவர்ந்தீர்கள்
சென்ற இடமெல்லாம் தனித்துவமாய்
சொந்த பந்தங்கள் எல்லாம் அரவணைத்தீர்கள்
நட்பாலே நண்பர்கள் கூட்டத்தை உருவாக்கினீர்கள்
அறப்பணிகள் எல்லாம் சிறப்பாய் ஆற்றிவிட்டு
இங்கு எல்லாக் கடமைகளும் முடிந்தன என்றா
சொல்லிவிட்டுப்போன விடுமுறையில்
சொல்லாமல் அமைதியாய் உறங்கி விட்டீர்கள்?
அண்ணா என்ற உன் தம்பி
கூப்பிடும் குரல் கேட்குதா?
என் குழந்தைகள்
பெரியப்பா, மாமா, எங்கே என்று அழைக்கும்
குரல் கேட்குதா?
அண்ணா மீண்டும் உன் முகம் எப்போ காண்போம்
உன் ஆத்மா சாந்தியடைய
ஐயப்பன் பாதம் பணிகிறோம்.

உடன்பிறவா சகோதர சகோதரிகள்
அகிலன் தேவகி, அனுசா, அகல்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் சென்றாலும்

31ம் நாள் சென்றாலும் ஈர விழிகள் காயவில்லை. உங்கள் முகம் பார்க்காது ஒரு நாள் போவது இயலாது. எந்தப் பக்கம் பார்த்தாலும் உங்கள் முகம் தான் தெரிகிறது. சுற்று இரவு வேளையில் வானத்தை பார்த்தால் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களில் உங்கள் முகம் மட்டும் தெரிகிறது. இன்றும் உங்கள் பெயரை உச்சரிக்கும் போது என் மனம் குமுறுகிறது. இனி எங்கு காண்போம். உங்கள் பெயரை சொல்லி அழைக்கும் வார்த்தைக்கு மேல் இனி எதுவும் ஒன்றுமில்லை. எம் துயரை துடைக்க தேற்றுவார் யாருமில்லை. எம்மோடு வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எம் மனதில் உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்.

சிவா குடும்பத்தினர்
மைத்துனர்.

## உங்களைப் பிரிந்து

31 நாட்கள் ஓடி உருண்டது. உங்களைப் பிரிந்து நாம் வாடி வருந்துகிறோம். உங்களை மறக்க நாங்கள் நினைக்கின்றோம். முடியவில்லை. தூங்கினால் கனவில் காண்கிறோம். எங்கு பார்த்தாலும் உங்கள் ஞாபகம்தான் நினைவில். எப்படி உங்களை மறப்பது! துயரத்தில் தவிக்கின்றோம்.

பரா குடும்பத்தினர்
(பரராஜசிங்கம் நித்தியானந்தம்)
மைத்துனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெரியம்மா பிள்ளைகள் உள்ளத்திலிருந்து

குடும்பத்தில் குல விளக்காய் குவலயத்தில் ஒளி தந்தாய்!
குன்றாத இளமையுடன் ஐயனையே தினம் தொழுதாய்
மாநிலத்தில் தளராமல் மனமுவந்து சேவை செய்தாய்
எம் சகோதரங்கள் ஐவருடன் ஆறுபேராய் இணைந்திருந்தோம்
சின்னஞ்சிறுவயதில் ஒன்றாகக் கூடி நாங்கள்
நிலவினிலே விளையாடி மகிழ்ந்த காலமெங்கே!
பாடசாலை செல்லாமல் ஒற்றுமையாக ஒளிந்திருப்போம்
உன் பிரிவு எங்களுக்கு தீராக் கவலையடா!
மின்னாமல் முழங்காமல் எங்கே ஒழிந்துவிட்டாய்!
அம்மா அழுகின்றா ஆறுதலைக் கூறனடா?
தான் வளர்த்த பிள்ளை என்று திகைத்து அழுகின்றா
பெரியன்ரி! பாடசாலை சென்றால் வரும்வரையும்
பெரியம்மா பெரியம்மா என்று சொல்லி சுற்றி வருவானே
பெரியம்மா போகும் முன்னே பாலகனே ஏன் சென்றாய்!
உன் கிரியை காணவர நமக்கிங்கு பலனில்லை
எம்பெருமான் திருவடிக்கே உன் நினைவு சமர்ப்பணமே!

பெரியம்மா, இராசலட்சாமி
பிள்ளைகள், செல்வராணி, செல்வேந்திரன்
ஸ்ரீகாந்தன், செல்வமலர், செல்வச்சீலன்

## மைத்துனர் மைத்துனி இரங்கல்

இதயம் நிறைந்த இனியவரே எவருக்கும்
இரங்கி உதவி செய்யும் பண்பினரே போனீரோ!
உதய நிலவாகி ஒளியுமிழ்ந்த உத்தமரே!
உருகியழ வைத்தின்று உயர்ந்தீரோ! துயருற்றோம்
நிதமும் உம் ஆத்மா நிமலனவன் தாளிணையில்
நிறைவாய் உவந்தமர
நெக்குருகி அஞ்சலித்தோம் பாதம் பணிந்து!
பாசநெஞ்சத்தால் மலர் சொரிந்து வணங்குகின்றோம்

இராசசீலன், கேதீஸ்வரன், மயூரன்
பவதாரணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா எங்கே மறைந்தீர்

கட்டியணைத்தெமக்கு கனிமொழிகள் பேசுமாமா
காணாமல் நீங்கள் போய் ஒழித்த இடம் சொல்லுமாமா
சங்கீதம் பாடம்மா என்று கேட்டு மகிழ்வீரே!
விளையாட்டுப்பரிசெல்லாம் பார்த்து மகிழ்ந்தீரே
தங்கைகள் உங்களைக் காணாது தவிக்கின்றனர்
வேல்சிற்கு வரும்போது வகை வகையாய் பண்டங்கள்
விதம் விதமாய் கொண்டு வந்து எங்களுக்கு தருவீரே
பிறந்த நாள் வந்தவுடன் பரிசு கொண்டு வருவீரே!
பரிசுகள் பார்க்கும்முன்னே பறந்தோடி மறைந்தீரே!
பார்க்கும் இடமெல்லாம் மாமா உன் முகம்தான்
பறந்தே வந்திடுங்கள்! மாமாவே மாமாவே!

இராகவி, வைஸ்ணவி, சங்கவி
அஜே, அனிஸ்.

## மருமகள் நிலாவின் கண்ணீர்ப்பூக்கள்

கலகலத்த முகம் எங்கே! கண்ணூறு பட்டதுவோ!
சொல்லாமல் சென்று விட்டீர்
மாமா வந்து எனைப் பாராயோ பக்கபலம் தாராயோ!
சின்னஞ்சிறு வயதில் இந்தியாவில் படிக்கையிலே
அப்பா அம்மாவுடன் சேர்ந்திருந்து உணவுண்போம்
காலத்தின் கோலத்தால் அங்குமிங்குமாய் இருக்க
இலண்டனுக்கு வருவதற்கு அரும்பாடு பட்டீரே
மணமேடைதான் அமைத்து மாங்கல்யம் செய்து வைத்தீர்
மழலைச் செல்வத்துடன் மாண்புறவே வாழவைத்தீர்!
மாசிலா மாமாவே மாண்புடைய உத்தமரே!
பாரினிலே நல்ல பண்புடனே வாழ்ந்து வந்தீர்
பாசமலராக எம்மை எல்லாம் காத்து வந்தீர்
சொல்லாமல் கொள்ளாமல் மறைந்த மாயமென்ன?
உயிர் உள்ள மட்டும் உங்களை மறவோம்?
இறைவன் பாதத்தில் அஞ்சலிகள் செய்விப்போம்

என்றும் மறவாத மருமக்கள்
நிலா, ராஜ், லதிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன் செல்வராசாவின் இரங்கல்

சின்னஞ்சிறு வயதிலே சிங்கார வார்த்தை சொல்லி
கன்னக்குழி விழவே கதைத்திடுவோம் மழலை மொழி
உன்னை நினைக்கையிலே கண்ணீர் மல்குதடா!
நீ கடல் கடந்து சென்றாலும் அண்ணா அண்ணி,
மறக்காமல் கை வரிசை கொண்டு வந்தாய்
இரண்டாயிரத்துப் பன்னிரண்டில் எங்கள் வீடு வந்து
சரளமாகப்பேசி உணவுண்டு மகிழ்ந்தீரே
ஆசையுடன் நாம் கதைத்த கதைகள் எல்லாம்
கண்ணீராய்ப் போச்சுதடா
உன் அக்கா, தங்கைமார் உள்ளம் விசும்புகின்றார்
உங்கு வந்து உனைப்பார்க்க உத்தமனே முடியவில்லை
தீராத கவலையுடன் தியானிக்கிறேன் பிள்ளையாரை
ஆறாத துன்பம் அலை அலையாய்ப் பின்னுதடா!
அடுத்தவருடம் வருவேன் அண்ணா என்றாயே
அலைகின்ற மனதிற்கு ஆறுதலைத் தாருமையா
இத்தியடி விநாயகன் பாதம் பணிந்து ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும்

அண்ணன்
செல்வராசா, செல்வராணி
பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பு மகனிற்காய்......!!!

அறியாத வயதினில்
தந்தையை இழந்த தனயன் - அவன்
என் அன்பு மகன் ஸ்ரீமான் விஜயன்
அன்னையின் அரவணைப்பில்
கலைகள் பல கற்றும் - போதவில்லை
என்று நீ மேற்படிப்பிற்காய்
பிரித்தானியா சென்று விட்டாய்!!
தாய் நாடு வந்தவுடன் சித்தப்பா என்று - நீ
எங்கிருந்தாலும் தேடி வந்து
உன் பாசமழைதனை சொரிவாயே
அதை எண்ணி மகிழ்ந்து பூரித்திருக்கிறேன்
இனி நான் என் அன்பு மகனை எங்கே தேடுவேன்?
நல்லவனுக்கு இவ்வுலகில் காலமில்லை,
என்று ஆன்றோர் கூறுவதை கடவுளும் நிரூபித்து விட்டார்
உன் சொந்தங்கள் பந்தங்கள்
அனைவரையும் கவனிக்கத் தவறவில்லை
அனைவரையும் தவிக்க விட்டு எங்கு நீ சென்று விட்டாய்?
காலன் உன் கணக்கை முதலிலே எழுதி விட்டான்
இது அறியாது நீயும் - நாமும் பல எண்ணங்கள்
கொண்டிருந்தோம் பொய்யாகி விட்டது.....

"மரணம் என்பது ஜீவனைப் பொறுத்த வரையில்
புதிய சக்தியும் புது ஆற்றலும் உற்சாகமும் திறமையும்
உயிரில் உருவாகும் ஒரு புனித நிகழ்வு"
என்பதால் அனைவரும் அமைதி அடைவோமாக.

என்றும் உன் பிரிவால் துயருறும் சித்தப்பா
நவரத்தினம் (சிவசம்பு - மீசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்பு விஜயண்ணாவே!

உங்கள் இழப்பின் துயரை தாங்கவே முடியாமல் இருக்கிறது அண்ணா.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

என்ற வாக்கிற்கிணங்க இவ்வளவு விரைவாக இவ்வுலக வாழ்க்கையை விட்டு இறைவனடி சேர்ந்தீர்களோ அண்ணா. உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் அரவணைத்து உபசரிப்பீர்கள் அண்ணா. அந்த அழகான புன்சிரிப்பை எங்கே இனிக் காண்போமண்ணா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பெரியமாமியின் பிள்ளைகள் குடும்பத்தினர்.
(சிவபாக்கியம் யோகசுந்தரம்)

## மைத்துனரிடமிருந்து

கருணை உள்ளம் கொண்ட அத்தான்
மறக்க முடியவில்லை உங்கள் முகம்
கனவாக இருக்கும் என்று நம்பி
உறங்க மறுக்கின்றன விழிகள்
உங்கள் வரவை எதிர்பார்த்து

அம்பிகை நாதன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் நிலைத்திருக்க சில விதிமுறைகள்

- குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க....
- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள், விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்
- நீங்கள் சொன்னதே சரி. செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சில் பண்பில்லாத வார்த்தைகளையும், நடத்தையில் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதல் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சைத் தொடங்க முன் வாருங்கள்.

தொகுப்பு.
திரு. த. பரமானந்தம்
ஆசிரியர்.
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To favourite uncle Vijayan,

You were the one who taught us what is right and wrong in life. You were the one who shown us now to enjoy our life.

Whenever we had our rough times. You will be the first to support us. All the good memories we have in the past are due to your presence and your motivation.

We will never find the same love that you shower towards us in our life.

We will always be proud of who you were. It is very difficult to think about a life without you, but we will never give us, we will always do our best to make you very proud of us and to show others how great our Vijayan Mama's advises are we will meet you again mama.

*Love Thanusan, Mathusana & Laksana.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We Miss you Periyappa.....

We want to see you again but we can't....

We love you forever

We are sad that you have gone forever,

You took us to the park; you took us to the beach

You came to our birthday parties and gave us lovely gifts.

We played with you and laughed together,

We talked to you and danced together,

We love you to come and be here with us....

*We love you Periyappa.*

*From*

*Abisha Ahilan, Abiram Ahilan, Abishon Ahilan.*

## Vijayan Uncle

Vijayan Uncle is a really kind and helpful person.

Everything he says gives me joy in my heart. Losing a loved one, leaves a heartache that no one can heal but their loving memory is a precious gift that no one can steal. He said; if you pass your 11+ Exam, he would get me anything.

Now this memory will never go away.

*Timon Siva*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Loving Chithappa!

Chithappa,

You are the great person and we will always remember you. We had a quality time with you.

When you left us, it felt like a story without an ending. There is one thing, that we are happy about. It is that you are in a better place with god and you are going to shower your blessing on us chithappa!

*Anita, Ajith (Kala Family)*

## May your heart

May your heart and soul find peace and comfort.
My family's hearts are with you and your family.
No words can describe how sorry I am for your loss.
Our collective hearts are heavy with sympathy.
Our hearts go out to you in your time of sorrow.
Please accept our most heart felt sympathies for your loss...
Our thoughts are with you and your family at this difficult time.

*Uthayakumar's family.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டு

இறந்தவர்களுடைய பெருமை ஏன் பேசப்படுகிறது எழுதப்படுகிறது என்றால் அது ஒரு சம்பிரதாயத்துக்காக அல்ல, அதிலிருந்து மற்றவர்கள் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கும்போது அவருடைய வாழ்க்கையின் மூலம் மற்றவர்கட்கு இடித்துக் கூறும் செய்தி ஒன்று இருக்கும்.

இச்செய்தியை வைத்துக்கொண்டு மற்றவர்கள் வாழ வேண்டும். அதுவே பின்னர் சிலருக்கு கூறப்போகும் செய்தியாகவும் இருக்கும்.

அமரத்துவம் எய்திய திரு விஜயன் அவர்கள் தன் வாழ்க்கை மூலம் இடித்துக் கூறும் செய்தியானது செய்காரியம் நேரமறிந்து செய்தல், ஒற்றுமைப்பண்பு, உதவி செய்யும் மனப்பாங்கு, கடின உழைப்பு, மற்றவர்களைப் புண்படுத்தாத பண்பு போன்றவையாகும்.

இவற்றை நல்ல வழிகாட்டலாக ஏற்றுக்கொண்டு நாமும் எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றை நல்ல செய்திகளாக சேகரித்து வைத்திருப்போமாக. இவையே நாமில்லாக் காலத்தில் மற்றவர்களால் பேசப்படும், எழுதப்படும்.

அமரத்துவமெய்திய செய்தியை விஜயன் மாமா அவர்கள் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்கட்குமாக உழைத்து தன் சந்ததியின் எதிர்காலத்துக்காக செய்து கொள்ளும் அர்ப்பணிப்புகள் இறந்தும் இறவாமல் அவர்களைப் போற்ற வைக்கிறது.

செல்வி பரமானந்தம் கஸ்தூரி
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

# பஞ்சபுராணம்

## தேவாரம்

நிரை கழலரவஞ் சிலம் பொலியலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரை கெளுமகளோர் பாகமாய்ப்புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரை கெழு சந்தும் காரகிற் பிளவும்
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே!

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த எம்பரனே!
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரோடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள்புரியாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோள் நெருப்பே
வேறணிபுவன போகமேபோக
வெள்ளமே மேருவில் வீர
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா!
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னை
தொண்டனேன் இசையுமாறிசையே!

## திருப்பல்லாண்டு

நிட்டையிலாவுடல் நீத்தென்னை
ஆண்டநிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச்
சீராட்டும் திறங்களுமே சிந்தித்(து)
அட்டமூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்கு ஆல நீழற்
பட்டனுக்கு என்னைத் தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
யறவா நீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமியே சரணம் ஐயப்பா

ஹரிவரா ஸனம் ஸ்வாமி வித்வ மோஹனம்
ஹரிததிச்வரா ஸ்வாமி ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

சரண கீர்த்தனம் ஸ்வாமி சக்த மானசம்
பரண லோலுபம் ஸ்வாமி நர்த்த னாலயம்
அருண பாஸீரம் ஸ்வாமி பூத நாயகம்
ஹரிஹ ராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

ப்ரணய ஸத்யகா ஸ்வாமி ப்ராண நாயகம்
பிரணத கல்பகம் ஸ்வாமி ஸுப்ர பாஞ்சிதம்
ப்ரவை மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹ ராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே!

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

துரக வாகஹனம் ஸ்வாமி ஸுந்த ரானனம்!
வரக தாயுதம் ஸ்வாமி தேவ வர்ணிதம்
குருக்க பாகரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹ ராத்மஜம் ஸ்வாமி தேவ மாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிநயனப்ரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிசதபூஜிதம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

பவபயாபஹம் ஸ்வாமி பாவுகாவஹம்
புவனமோகனம் ஸ்வாமி பூதிபூஷணம்
தவளவாஹனம் ஸ்வாமி திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

களம்ருதுஸ்மிதம் ஸ்வாமி ஸுந்தரானனம்
களபகோமளம் ஸ்வாமி காத்ரமோஹனம்
களபகேசரீ ஸ்வாமி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!

ச்ரிதஜனப்ரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ச்ருதிவிபூஷணம் ஸ்வாமி ஸாதுஜீவனம்
ச்ருதிமனோஹரம் ஸ்வாமி கீதலாவஸம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே

சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

முடிசார்ந்த மன்னரொடு முனிவர் கூட
முடியாமல் வாழ்ந்த கதை இங்கே இல்லை
பிடி சாம்பராகின்ற உடலைக் கட்டிப்
பிடித்திங்கு கதறுவதில் பெருமை இல்லை
நடிகரப்பா நாங்களிந்த நானிலத்தில்
நல்லீசன் கழலிகைக்கே பாசம் வைமின்
நடிப்பை முடிவத்தவர் களங்கே முன்செல்லட்டும்
நம் கடமை முடியட்டும் நாமும் போவாம்!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நன்றி நவில்கின்றோம்

சிரம் தாழ்த்தி கரம் கூப்பி செய்கிறோம் நன்றிகளை
ஏற்றமுறு எம்தெய்வம் எமைவிட்டுப் பிரிந்த செய்தி
காற்றோடு கலக்குமுன்னர் கரம் நீட்டிப்பணிபுரிந்தோர்.
கடைசிக்கிரியை தனில் கருமங்கள் பலபுரிந்தோர்.
துன்புற்ற வேளைதனில் தொலைபேசியில் அழைத்து
துன்பங்களைப் பகிர்ந்தோர். மலர் மாலை அணிவித்து.
மலர் வளையங்கள் சாத்தியோர்.
கண்ணீர் அஞ்சலிகள் கடிதங்கள் அனுப்பியோர்.
இறுதி ஊர்வலத்தில் உகந்துதவி ஆற்றியோர்.
ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஆழ்ந்து
பங்காற்றியோர். இன்னும் பலவும்
இதம்படச் செய்வித்தோர்.
குறிப்பிட மறந்த உயர் மனம் படைத்தோர்
அத்தனை பேருக்கும் நன்றிகள்.

நன்றியுடன்
தாய்,
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print-London, www.jrprint.com \ T : 0208 503 6643